தாம்பரம் மாநகரம், செம்பாக்கம் தெற்கு, தாம்பரம் மேற்கு, பகுதிகளில் வாக்கு சாவடி முகவர்கள் கூட்டம் நடைபெற்றது. நிகழ்ச்சியில் கழக பொருளாளர் டி.ஆர்.பாலு.எம்.பி. அவர்கள் ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா.எம்.எல்.ஏ., தொகுதி பார்வையாளர் பரிதி இளம்சுருதி, பகுதி கழக செயலாளர்கள் எஸ். இந்திரன், இரா.சுரேஷ், வட்ட செயலாளர்கள் இரா.ராஜா, எம்.சி, எம். சீனிவாசகுமார், கொடி.ஆர். தாமோதரன், ரமணிஆதிமூலம், கற்பகம் சுரேஷ், பி.ஜோதிகுமார் மற்றும் வாக்குச்சாவடி முகவர்களும் கழகத் தோழர்களும் திரளாக பங்கேற்றனர்.

திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக சார்பில் அவசர ஆலோசனைக் கூட்டம் ஆவடியில் நடைபெற்றது இதில் மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். உடன் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, கே.ஜெ.ரமேஷ், மா.இராஜி, நிவேதா ஜெசிகா, பி.டி.சி.செல்வராஜ், வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், காயத்ரி ஸ்ரீதரன், பா.நரேஷ்குமார், த.எத்திராஜ், ஜி.ராஜேந்திரன், கு.விமல்வர்ஷன், வி.குமார், ஜெ.மகாதேவன், எஸ்.காஞ்சனாசுதாகர், எஸ்.சங்கர் மற்றும் மாநகர ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழக செயலாளர்கள் அணிகளின் நிர்வாகிகள் உள்ளனர்.

100 நாள் வேலை ஒழிப்பு : பா.ஜ.க. அரசையும், ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து

கடலூர் கிழக்கு மாவட்டத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள்!

மாவட்டச் செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கை!

கடலூர், டிச. 23 –

கடலூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு முதலமைச்சர், தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டத்தை சிதைத்து, அதன் திட்டப் பணிகளை சீர்குலைத்து, நிதி ஒதுக்கீட்டை குறைப்பது, மாநிலங்களின் நிதிச்சுமையை அதிகரித்து திட்டத்தை முடக்குவது, வேலை நாட்களை குறைப்பது, பயனாளிகளின் எண்ணிக்கையை குறைப்பது, கிராமங்கள் தான் நம் நாட்டின் முதுகெலும்பு என்ற அண்ணல் காந்தியடிகளின் பெயரை நீக்குவது, இந்தியை திணிப்பது என சட்டத்தை திருத்தியும் – நூறு நாள் வேலையையே இனி இல்லாமல் செய்து கிராம மக்களின் வாழ்வாதாரத்தில் அடிக்கத் துடிக்கும் ஒன்றிய பாஜக அரசின் நாசகார சதிச் செயலையும் – அதற்கு ஒத்து ஊதி தமிழ்நாட்டு மக்களுக்குத் துரோகம் செய்யும் அதிமுகவையும் கண்டித்தும், சட்டத்தை திரும்பப் பெற வலியுறுத்தியும் கடலூர் கிழக்கு மாவட்ட 'மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி' சார்பில் நாளை (24.12.2025 – புதன்கிழமை) காலை 10.00 மணியளவில், கடலூர் கிழக்கு மாவட்டத்தில் உள்ள காட்டுமன்னார்கோவில், குறிஞ்சி ப்பாடி, கடலூர், திருமுட்டம், பரங்கிப்பேட்டை, புவனகிரி, கம்மாபுரம், கீரப்பாளையம், குமராட்சி ஆகிய 9 ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும். அந்தந்த ஒன்றியங்களில் நடைபெறும் ஆர்ப்பாட்டத்திற்கு மதச்சார்பற்ற கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் தலைமை, முன்னிலை வகிப்பார்கள்.

அதுசமயம், ஊராட்சி ஒன்றியங்கள் வாரியாக நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் சம்மந்தப்பட்ட. கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த, திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை, வார்டு, கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பனிர்கள், முன்னாள், இந்நாள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள், ஒன்றிய, பெருந்தலைவர்கள், நகரமன்ற தலைவர்கள், பேரூராட்சி மன்ற தலைவர்கள், மண்டலக்குழு தலைவர்கள், முன்னாள், உள்ளாட்சி பிரதிநிதிகள், முன்னாள், மாவட்ட ஊராட்சிக்குழு, ஒன்றியக்குழு உறுப்பி னர்கள் மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், மாநகர, மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, சிறுபா ன்மையினர் நல உரிமை பிரிவு, தகவல் தொழில்நுட்ப பிரிவு அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள், கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த திமுக உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், முன்னோடிகள், தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

வடபெரும்பாக்கத்தில் ரூ.22.41 கோடி மதிப்பீட்டில்

புதிதாக கட்டப்பட்ட உயர்மட்ட மேம்பாலம்!

அமைச்சர் கே.என். நேரு திறந்து வைத்தார்!

சென்னை, டிச.23-

மணலி மற்றும் மாதவரம் மண்டலம், வார்டு-17 மற்றும் 23ல் புழல் உபரிநீர் கால்வாயின் குறுக்கே வடபெரும்பாக்கத்தில் சென்னை பெருநகர வளர்ச்சித் திட்ட நிதி மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதிகளில் ரூ.22.41 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட உயர்மட்ட மேம்பாலத்தினை நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு , நேற்று (22.12.2025) பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மணலி மற்றும் மாதவரம் மண்டலம், வார்டு-17 மற்றும் 23ல் புழல் உபரிநீர் கால்வாயின் குறுக்கே உள்ள தரைப்பாலம் மூலமாக வாகனப் போக்குவரத்திற்கு பொதுமக்கள் பயன்படுத்தி வந்தனர். மழைக்காலங்களில் அதிகளவு நீர் கால்வாயில் செல்வதால் தரைப்பாலம் நீரில் மூழ்கி, வாகனப் போக்குவரத்து தடைபடுவதுடன் பொதுமக்களும் கால்வாயை கடந்து செல்ல மிகவும் சிரமப்பட்டு வந்தனர். இப்பகுதி மக்களின் கோரிக்கையை நிறைவேற்றிடும் வகையில் வடபெரும்பாக்கத்தில் புழல் உபரி கால்வாயின் குறுக்கே சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதிகளின் கீழ் ரூ.22.41 கோடி மதிப்பீட்டில் புதிதாக பாலம் கட்டப்பட்டுள்ளது.

இந்தப் பாலமானது 190 மீ. நீளமும் 7.5 மீ. அகலத்துடன் இரண்டு வாகனங்கள் பாலத்தை கடந்து செல்லும் வகையில் நல்ல உறுதித்தன்மையுடன் அறிவியல் முறைப்படி புதிதாக உயர்மட்ட பாலம் கட்டப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் அவர்களால் இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் சிரமத்தினை போக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள இந்த பாலம் மூலமாக மணலி மற்றும் மாதவரம் பகுதியில் வசிக்கும் சுமார் 1 இலட்சம் மக்கள் மிகவும் பயனடைவர்.

முன்னதாக, நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் , மணலி மண்டலம், வார்டு-17க்குட்பட்ட செட்டிமேடு கிராமத்தில் ரூ.1.61 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள நாய்கள் இனக்கட்டுப்பாட்டு மையத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

இந்த மையமானது 3582 சதுர அடி பரப்பளவில் 20 எண்ணிக்கையிலான நாய்கள் பட்டிகள் (Kennels) கொண்ட அறை, தயாரிப்பு அறை, அறுவை சிகிச்சை அரங்கம், ஆய்வகம், சமையலறை, பொருள்கள் இருப்பு அறை, காவலாளி அறை உள்ளிட்ட 26 அறைகளுடன் கட்டப்பட்டுள்ளது.

மேலும், நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் மணலி மண்டலம், வார்டு-20க்குட்பட்ட மணலி ஏரியில் அம்ரூத் மற்றும் மாநகராட்சி மூலதன நிதியின் கீழ், ரூ.6.70 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ச்சியாக, மாதவரம் மண்டலம், வார்டு-27க்குட்பட்ட மாதவரம் ஏரியில் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் ரூ.11.78 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து, நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் மாதவரம் ஏரியில் பொதுமக்கள் பொழுதுபோக்கிற்காக படகு சவாரி மேற்கொள்வது தொடர்பாக படகு சவாரி செய்து ஆய்வு மேற்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து, மணலி மண்டலம், வார்டு-16க்குட்பட்ட கடப்பாக்கம் ஏரியில் ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) மற்றும் உலகளாவிய சுற்றுச்சூழல் வசதி (GEF) நிதியில் ரூ.58.33 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, அங்கு மரக்கன்றினை நட்டார்.

இந்த ஆய்வுகளின் போது, மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.சுதர்சனம் (மாதவரம்), கே.பி.சங்கர் (திருவொற்றியூர்), மதிப்பிற்குரிய துணை மேயர் மு. மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், இ.ஆ.ப., துணை ஆணையாளர் (பணிகள்) வி. சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டாரவி தேஜா, இ.ஆ.ப., செயல் இயக்குநர் கௌரவ் குமார், இ.ஆ.ப., நிலைக்குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, மண்டலக்குழுத் தலைவர்கள் ஏ.வி.ஆறுமுகம், எஸ்.நந்தகோபால், மாமன்ற உறுப்பினர்கள் ஆ.ராஜேந்திரன், அ.சந்திரன், ர.ஜெய்சங்கர், ப.ராஜன் உள்ளிட்ட மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் உடனிருந்தனர்.

மணலி ஏரியில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்புப் பணிகள்

இந்த மணலி ஏரியானது, 29 ஏக்கர் பரப்பளவில் (1,17,160 சதுர மீட்டர்) 1.20 மீ. ஆழத்துடன் 4 இலட்சம் கனஅடி நீர்த்தேக்கம் உடையதாக இருந்தது. இதில் தற்போது 4மீ. ஆழத்துடன் 12 இலட்சம் கன அடி நீர்த்தேக்கம் உடையதாக கட்டமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஏரியில் ஆழப்படுத்துதல், அகலப்படுத்துதல், கரைகளைப் பலப்படுத்துதல், அணைப் பகுதியில் சரளை கற்களைப் பதித்தல், சுற்றுச்சுவர் அமைத்தல், ஏரியில் மழைநீர் சேர்வதற்கும், உபரிநீர் வெளியேறுவதற்குமான கட்டமைப்புகள் உள்ளிட்ட புனரமைப்புப் பணிகளும், சிறுவர் விளையாட்டுப் பகுதி, பூங்கா, அமர்வதற்கு இருக்கை வசதிகள், வாகன நிறுத்துமிடம், நடைபாதை, கைப்பிடிகள், மின்விளக்கு வசதி, குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, பாதுகாவலர் அறை, சிற்றுண்டி உணவகம் உள்ளிட்ட மேம்பாட்டுப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் மணலி ஏரியில் மேற்கொள்ளப்பட்டுள்ள புனரமைப்புப் பணிகளின் காரணமாக தற்போது பெய்த மழையினால் இந்த ஏரியில் நீர் நிரம்பி ரம்மியமாக காட்சியளிக்கிறது. இதனால் அருகிலுள்ள பகுதிகளில் மழைநீர் பாதிப்பு குறைந்து நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து மக்கள் பெரிதும் பயனடைந்துள்ளனர்.

மாதவரம் ஏரியில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்புப் பணிகள்

பெருநகர சென்னை மாநகராட்சி, மாதவரம் மண்டலம், வார்டு-27க்குட்பட்ட மாதவரம் ஏரியானது 66.11 ஏக்கர் பரப்பளவு கொண்டதாகும். இந்த ஏரியில் 5 மழைநீர் வடிகால் வாய்கள் இணைக்கப்பட்டுள்ளது. இக்கால்வாய்கள் மூலமாகவும் மழைக்காலங்களில் பொழியும் மழையின் மூலமாகவும் பெருமளவில் நீர் சேகரிக்கப்படுகிறது. அவ்வாறாக, இப்பகுதி மக்களுக்கு மிகவும் பயன் தரக்கூடிய இந்த மாதவரம் ஏரியினை பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலமாக ரூ.11.78 கோடி மதிப்பீட்டில் ஆழப்படுத்துதல், புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளுதல், உள்ளிட்ட பல்வேறு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், மாதவரம் ஏரியினைப் பொதுமக்கள் பார்த்து ரசிப்பதற்கும், நடைப்பயிற்சி மேற்கொள்ளுவதற்கு புதிய நடைபாதையும், சுற்றுசூழல் பேணிக்காப்பதற்கு ஏரிக்கரை ஓரங்களில் மரக்கன்றுகள் நடப்பட்டும், ஏரிக்கரையில் உள்ள மண்கள் கரையாமல் இருப்பதற்கு அறிவியல் முறைப்படி கட்டமைப்புகளும் அமைக்கப்பட்டுள்ளது.

மாதவரம் ஏரியினை சுற்றுலா தளமாக மாற்றி பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் பயன்படுத்துவதற்கு தமிழ்நாடு சுற்றுலா கழகம் மூலமாக ஏரியில் படகு சவாரி அமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடப்பாக்கம் ஏரியில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்புப் பணிகள்

மணலி மண்டலம், வார்டு-16க்குட்பட்ட கடப்பாக்கம் ஏரியில் ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) மற்றும் உலகளாவிய சுற்றுச்சூழல் வசதி (GEF) நிதியில் ரூ.58.33 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தக் குளம் 134.89 ஏக்கர் பரப்பளவில் 13.4 சதுர கிலோ மீட்டர் நீர்ப்பிடிப்பு பகுதியுடன் 4 முதல் 8 மீ. ஆழத்துடன் 1.2 மில்லியன் கனமீட்டர் நீர் கொள்ளளவு திறனுடன் இருந்தது. தற்போது இது 1.9 மில்லியன் கனமீட்டர் நீர் கொள்ளளவு திறனுடன் மேம்படுத்தப்பட்டுள்ளது.

இந்தக் குளத்தில் ஆகாயத்தாமரை அகற்றுதல், 7.2 இலட்சம் கனமீட்டர் பரப்பளவில் வண்டல் மண் அகற்றி தூர்வாருதல், 3,450 மீட்டர் நீளத்திற்கு கரைகள் அமைத்து பலப்படுத்துதல், நீர் உள்ளே வரும் கால்வாய்கள், வெளியேறும் மதகுகள் மற்றும் உபரிவடிகால்களைப் புதுப்பித்தல், 5 ஏக்கர் பரப்பளவில் பறவை தீவு மற்றும் பல்லுயிர் வாழ்விடங்களை உருவாக்குதல். வண்டல் மண்ணைக் குறைப்பதற்கும் நீரின் தரத்தை மேம்படுத்துவதற்கும் நுழைவாயிலில் ஆழமற்ற குளம் உருவாக்குதல், பசுமைத் தோட்டங்களுடன் கூடிய பகுதிகள், பசுமைப் பரப்பளவை அதிகரிக்கும் வகையில் தாவரங்கள் நடுதல், நடைபாதை, இருக்கைகள் மற்றும் குழந்தைகள் விளையாடும் பகுதி, பட்டாம்பூச்சி மற்றும் தட்டாம்பூச்சி பன்முகத்தன்மைக்கு பிரத்யேக இடம் உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த திட்டத்தில் சுற்றுச்சூழலுக்கு உகந்த கட்டுமானப் பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன.



அண்ணாநகர் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் எம்.கே.மோகன் தொகுதி ஒருங்கிணைப்பாளர் வே.கௌதமன் 101 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜ் அவர்கள் நேற்று "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி (89,90,91,92,93) பாக முகவர்கள் ஆலோசனை கூட்டம் அண்ணாநகர் வடக்கு பகுதி 101அ வட்டக் கழக செயலாளர் சி.பி.திருமலை தலைமையில் பகுதி செயலாளர் ச.பரமசிவம் முன்னிலையில் 101அ வட்ட கழக பாக ஒருகணிப்பாளர் ச.அசோக்குமார் மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள், வழக்கறிஞர் அணி விஜயகுமார் மற்றும் BLA2,BDA,BYO,BLC நிர்வாகிகள், கழக முன்னோடி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சோழிங்கநல்லூர் தொகுதி –

காரம்பாக்கம் 199வது வட்டத்தில் ஆலோசனைக் கூட்டம்!

அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சென்னை, டிச.23-

சோழிங்கநல்லூர் தொகுதி காரப்பாக்கம் 198-வது வட்டத்தில்,"என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச் சாவடி ஆலோசனை கூட்டம் தொகுதி பொறுப்பாளர் டாக்டர். நா.சந்திரபாபு மற்றும் சோழிங்கநல்லூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எஸ்..அரவிந்த்ரமேஷ் எம்.எல்.ஏ. ஆகியோர்கள் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார்கள்.

வட்டக் கழக செயலாளர் பா தேவகுமார் அவர்களின் தலைமையில் 22/12/2025 அன்று 381 மற்றும் 381-வது பாகங்களில் "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச் சாவடியின்" செயல்பாடுகளின் ஆலோசனைக் கூட்டத்தில், BLA-2 பாக நிலை முகவர்கள் அவரவர் வாக்குச்சாவடியை வெற்றி வாக்குச்சாவடியாக மாற்றுவதன் மூலமே நம் இலக்கை அடைய முடியும். வாக்குசாவடியை வெற்றி வாக்குச் சாவடியாக மாற்றுவது எவ்வாறு என்பதற்கான வழிமுறைகளை அவரவர் பாகங்களில் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட 100 குடும்பங்களை நேரில் சந்தித்து கழக ஆட்சியின் சாதனைகளை எடுத்துரைத்து பொது மக்களின் தேவைகளும், கோரிக்கைகளையும் பெற்று அதை நிறைவேற்றும் விதமாக பணியாற்றிட வேண்டுமென தொகுதி பொறுப்பாளர் டாக்டர். நா.சந்திரபாபு மற்றும் சோழிங்கநல்லூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த்ரமேஷ் எம்.எல்.ஏ. ஆகியோர்கள் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார்.

இந்நிகழ்வில், சோழிங்கநல்லூர் மத்திய பகுதி கழக துணை செயலாளர்கள் வி. தனசேகரன், வி.வி.க்குமரேசன், திருமதி.சாந்தி பசுபதி,தலைமை பொதுக்குழு உறுப்பினர் தா.பஷீர், மாவட்ட பிரதிநிதி எஸ்.ஆர். உமாபதி தகவல் தொழில் நுட்ப அணி பகுதி அமைப்பாளர் டாலர் மகேஷ் உள்ளிட்ட BLA-2 பாக முகவர்கள், BDA-எனும் பாக டிஜிட்டல் ஏஜென்ட் மற்றும் கழக நிர்வாகிகள், பொது மக்கள் உள்ளிட்ட அனைவரும் உடனிருந்தனர்.

குன்றத்தூர் தெற்கு ஒன்றிய ஊராட்சிகளில்

'என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச் சாவடி' பரப்புரைக் கூட்டம்!

ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் அறிவிப்பு!

சென்னை, டிச. 23-

குன்றத்தூர் தெற்கு ஒன்றிய செயலாளர் படப்பை ஆ.மனோகரன் அறிவிப்பு வருமாறு:

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் அறிவுரைக்கிணங்க திருப்பெரும்புதூர் சட்டமன்ற தொகுதி. குன்றத்தூர் தெற்கு ஒன்றியம் உள்ளடங்கிய ஊராட்சிகளில் இன்று 23.12.2025 செவ்வாய்கிழமை கீழ் கண்ட அட்டவணைப்படி கூட்டம் நடைபெற இருப்பதால், மாவட்ட ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள், கிளைக்கழக செயலாளர்கள், வாக்குச்சாவடி நிலை முகவர் (BLA2), வாக்குச்சாவடி இ-முகவர்கள் (BDA) உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் அனைவரும் இதனை அழைப்பாக ஏற்று மிக முக்கியத்துவம் வாய்ந்த இக்கூட்டத்தில் சம்பந்தப்பட்ட அனைவரும் பங்கேற்று சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டங்கள் நடைபெறும் இடங்கள் வருமாறு:

23.12.2025 - மாலை -04.00 - ஆர்.கே.மஹால், - மணிமங்கலம் - மணிமங்கலம் - கரசங்கால், மலைப்பட்டு, சேத்துப்பட்டு,

23.12.2025 - மாலை 04.30 - ஸ்ரீ லட்சுமி நாராயணன் திருமண மண்டபம் மாடம்பாக்கம் ஆதனூர்,காவனூர், மாடம்பாக்கம், ஓரத்தூர்,

23.12.2025 - மாலை -05.30 -திரு.சி.பார்த்தசாரதி குன்றத்தூர் தெற்கு ஒன்றிய பொறுப்புக்குழு உறுப்பினர் இல்லம், - ஆரம்பாக்கம் - செரப்பணஞ்சேரி, சாலமங்கலம், வைப்பூர், - நாட்டரசன்பட்டு,

23.12.2025 - மாலை -06.00 - சமூதாய நலக்கூடம் - சென்னக்குப்பம் - சென்னக்குப்பம், வட்டம் பாக்கம், எழிச்சூர், வளையக்கரணை, வடக்குப்பட்டு,

23.12.2025 - மாலை -06.30 - சி.என்.சி மஹால் - படப்பை

இவ்வாறு படப்பை ஆ.மனோகரன் அறிவித்துள்ளார்.

மதுரவாயல் வடக்கு பகுதி கழக ஆலோசனைக் கூட்டம்!

பகுதிச் செயலாளர் நொளம்பூர் வே. ராஜன் அறிவிப்பு!

சென்னை, டிச. 23-

மதுரவாயல் வடக்குப் பகுதி செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் கழக இளைஞரணி செயலாளரும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் ஆணைக்கு இணங்கவும் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர், மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழிகாட்டுதலின்படி இன்று (23.12.2025) செவ்வாய் கிழமை காலை 10.00 மணி அளவில் பகுதி கழக அலுவலகத்தில் (நொளம்பூரில்) பகுதி கழக அவைத்தலைவர் ஆர். கர்ணல் அவர்களின் தலைமையில், பகுதி கழக நிர்வாகிகள் ஆ. மாலினி, தீ. பாலாஜி, எம்.ஏ.செந்தில் சுரேஷ், ம. உதயகுமார் ஆகியோரின் முன்னிலையில் பகுதி கழக ஆலோசனை கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மதுரவாயல் வடக்கு பகுதி கழகத்திற்கு உட்பட்ட மாவட்ட அமைப்பாளர்கள், வட்டக் கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : 1. 24/12/2025 தேதி மேடவாக்கத்தில் நடைபெற உள்ள கண்டன ஆர்ப்பாட்டம் குறித்து, 2. கழக ஆக்கப் பணிகள் குறித்து

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஆர்.எம்.ரங்கநாதன் தலைமை! சொ.வேலு முன்னிலை!

எழும்பூர் 99வது வட்டத்தில் அன்னம் தரும் அமுதக் கரங்கள்!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு காலை சிற்றுண்டி வழங்குகிறார்!

சென்னை, டிச. 23-

தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் திராவிட மாடல் நாயகர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் அமைச்சர், சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு, சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் வடக்கு பகுதி, 99வது வட்டத்தில் புரசைவாக்கம், சண்முகராயன் தெரு - பொன்னன் தெரு சந்திப்பில் இன்று (23.12.2025 - செவ்வாய்கிழமை) காலை 7.00 மணியளவில் நடைபெறவுள்ள அன்னம் தரும் அமுதக் கரங்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு காலை சிற்றுண்டி வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சிக்கு (வட்டச் செயலாளர் ஆர்.எம்.ரங்கநாதன் தலைமை வகிக்கிறார். பகுதிச் செயலாளர் சொ. வேலு முன்னிலை வகிக்கிறார்.

எனவே இந்நிகழ்வில் எழும்பூர் வடக்கு பகுதி99வது வட்டத்திற்குட்பட்ட மாவட்டகழக பகுதிகழக வட்டகழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், பாகமுகவர்கள் (BLA2), வாக்குச்சாவடி நிலை உறுப்பினர்கள் (BLC3), மூத்த முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள், மகளிர்கள், இளைஞர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு வட்டச் செயலாளர் ஆர்.எம். ரங்கநாதன் கேட்டுக்கொண்டுள்ளார்.

சோழிங்கநல்லூர் தொகுதி காரப்பாக்கம் 198வது வட்டத்தில்.என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச் சாவடி ஆலோசனை கூட்டத்தில் தொகுதி பொறுப்பாளர் டாக்டர். நா.சந்திரபாபு, எஸ்.அரவிந்த்ரமேஷ் எம்.எல்ஏ. ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினர், உடன் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.